எம். ஜி. ராமச்சந்தர், கே. மாலதி,
கே. தவமணிதேவி நடித்த

ராஜகுமாரி

RAJAKUMARI

கதைச்சுருக்கம்

இந்தியாவில் ஒரு நாட்டில்—ராஜகுமாரி மல்லிகா தன்னை மணக்கத் துடிக்கும் ஆலகாலனை அலட்சியப்படுத்துகிறாள். வழக்கமாக வேட்டைக்குச் செல்லும் மல்லிகாவுக்கு ஒருநாள் மனமோகன வனவிருந்து கிடைக்கிறது. அது தொடர்ந்து நாள்தோறும் நடைபெறுகிறது. விருந்து வழங்கியவன் ஒரு சாதாரண வாலிபன் சுகுமாரன் காதல் ஏற்றத் தாழ்வை இணைக்கும் ஏணி மரமல்லவா? இருவருக்குமிடையே அன்பு எழுகிறது. "பெரிய இடத்து விஷபம் ஆபத்து அணுகாதே" என்ற தாயின் உபதேசத்தைத் தட்டிகழிக்கும் தைரியம் அவனுக்கில்லை. மல்லிகா கைவிடப்படுகிறாள்.

ராஜகுமாரியின் நினைவில் வாடிய ஆலகாலன் அவளை எப்படியும் தன்வசப்படுத்த ஒரு சக்தியை தேடுகிறான். தனக்கு ஒரு அழகியைத் தேடி அலைந்த மந்திரவாதியைச் சந்தித்து விஷயத்தை வெளியிடுகிறான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோலாயிற்று மந்திரவாதிக்கு. ஆலகாலனையும் ஏமாற்றி மல்லிகாவை கவர்ந்துசெல்லுகிறான்.

'மல்லிகாவை மீட்பவருக்கு அவளையே பரிசாகத் தரப்படும்'' என்று உத்தரவு பிறக்கிறது. அதுகண்ட சுகுமாரா தாயின் ஆணைபெற்றுக் கிளம்புகிறான். சர்ப்பத் தீவை அடைந்த சுகுமாருக்கு நல்ல துணை கிடைக்கிறது பகு பனி! இருவரும் பாம்பாட்டியின்மக்கள் தான். வாஞ்சை அவர்கள் மூவரையும் வசியப்படுத்தி விடுகிறது. "விஷாராணி நடத்தும் போட்டியில் வெற்றிபெற்றுவிட்டால் கப்பல் கிடைக்கும்" என்பது பகுவின் யோசனை. விஷாராணியின் விஷஉள்ளத்தை அறியாத முடிவு இது!

போட்டியில் சுகுமாருக்குத்தான் வெற்றி அந்த வெற்றியில் குறுக்கிடுகிறான் ஆலகாலன் அவனும் முறியடிக்கப்படுகிறான். அன்றிரவு விஷாராணி தன்னை காமக்கப்பலில் ஏற்றிச் செல்லுமாறு சுகுமாரை வற்புறுத்துகிறாள். அவன் மறுக்கிறான். தன் இஷ்டத்துக்கு இணங்காக ஒரு தாசிகூட உலகத்தில் இருக்க முடியாது என பேய்க்கூச்சலிடுகிறாள் விஷா! பகுவும் பகுனியும் திடீரென அங்குதோன்றி சுகுமாரைக் காப்பாற்றுகின்றனர். ராணியின் ஆத்திரம் விஷம்போல் ஏறுகிறது! மந்திரவாதியால் கவரப்பட்ட மல்லிகாவின் கதி என்ன? என்பதை திரையில் காண்க. சுபம்!

Kanags

பாட்டுகள்

பல்லவி

பைரவி] ராகமாலிகை [ஆதி

பாட்டையென்ன சொல்வேன் பாங்கி
பாவலர் ஞான ஓவியமான தமிழ் (பாட்)

அநுபல்லவி

பாட்டினிலும் பொருள் தோற்றத்திலும் இன்னிசை
கூட்டுறவிலும் இன்பம் ஊட்டிடும் ஆனந்தப் (பாட்)

தோடி

ஆட்டம் ஆனந்தம் தரும்—சதுர் (ஆ)
அழகான மயில் போலும் ஒயிலாக ஆடும் சதுர் (ஆ)

கேதார கௌள

பாட்டுக்கிசைந்த ராக தாளங் கூட்டி தமிழ் (பா)
பார்வையுடன் கரங்கள் கால்களாட்டி (கண்)
தீட்டும் கவிப்பொருள் தெரியக்காட்டி புலவர்
சிந்தை மகிழ யிந்த தேகாரோக்யம் பெறும் (ஆ)

ராகம் மோஹனம்—கோரஸ்

வாழ்வோம் வாழ்வோம் மாதர்கள் நாமே (வா)
வளர்கலையில் அரசியலில் வாகைசூடி—வீரமதாய் (வா)
ஆ....டவர் தம தடிமை ஆஹா ஹா—நாமா
அவர் மதிக்கவே ஜகம் துதிக்கவே (வா)
வாளெடுக்கவும் பெண்தன்மை சீர் படைக்கவும்
வகையாய் செய்தே மதியினால் பெருமைபாய்
மானில மீதினிலே (வா)
சீர்தரும சமத்துவம் தேசிய மகத்துவம்
பார் மீதினில்மேலோங்கிடவே பழகுவோம் உலகிலே
பா....மணம் வீசவே துதி பேசவே (வா)

இராகமாலிகை] 1 ஆனந்தபைரவி [ஆதி

சுகு: அன்பின் பெருமை அருமை அதனை மனம்
அன்றி வாயில் செல்லத்கரமா
மல்: சொந்தம் தேடும் வாழ்வினில் அதுபோல்
சுகிர்தம் வேறெதும் தருமா (சொ)

2 பஹுதாரி

சுகு: அடிமையிடம் ஓர் ராஜகுமாரி
அருகில் நாடியதும் அன்பல்லவோ (அடி)
மல்: அணைவரும் புவிமேல் ஒன்றே என்றும்
அழகொடு பழகுதல் நன்றல்லவோ (அணை)

Kanags

ஹேமாவதி

சுகு: ஆணுயர்வும் பெண்ணுருயர்வும்
ஆகும் தூய அன்பினிலே (ஆண்)
மல்: நாமும் நேரே காணும் காட்சி
நாளும் அன்பாலே யின்பம் (நாமும்)
இரு: அன்பின் பெருமை அருமை அதனை மனம்
உன்றி வாயில் சொல்லத்தரமா
சொந்தம் தேடும் வாழ்வினில் அதுபோல்
சுகிர்தம் வேறெதுவும் தருமா

ராகம் குந்தலவராளி] [தாளம் ஆதி

அரசகுமாரி அன்புறும் ஸ்நேகம்
அதிர்ஷ்டமோ எதுவோ சந்தேகம் (அர)
தரணியின்மீதே தருணியும் நானும்
சரிசமமா நிஜமா பொய்யாமா (அர)
பூவொடு சேர்ந்த நார் மணம் வாய்ந்த
பாவனை போலவும் பூவையும் நானும் (பூ)
ஆவியும் தேகமும் மேவுதல் போலே
வாழ்குவோமோ என்னமோ அன்பாலே (அர)

தாளம்] [ஆதி

சுகு திருமுக யெழிலைத் திருடிக்கொண்டது தாமரையது(தி)
அதனால் நானே பெரியவனென்றது தாமரையது
மல் மருவொடு சேர்ந்த வனரோஜா மலரென்ன
சொன்னது (மரு)
சுகு: கருவிழிமாதின் கன்னச் சிவப்பைக் கவர்ந்தேன்
அதனால் பெருமை எனதே என்றது (கரு)
மல்: கதையின் முடிவு தானெது
சுகு: கலகம் தீர்ந்தது மலர்களின் (கல)
மற்றுமொரு கள்வன் வந்து சேர்ந்ததால் (கல)
மல்; சண்டை தீர்த்த திருடன் திருடினதேதது (சண்)
சுகு: சாம் ராஜ்ய யுவராணியின் மனது தானது (சாம்)
மல்: சரிதான் பிறகென்ன நடந்தது
சுகு: சல்லாப எழில் மயிலே அது தெரியாது
மல்: சொல்லவா–நான் சொல்லவா–நடந்ததை நான்
சொல்லவா பொல்லாத கள்ளனை
மனந்திருடிய மூன்றுவதுகள்ளனை-ராணிசிறையில்
தள்ளி மூடினாள்-மஹாராணி சிறையில் தள்ளி மூடினாள்

Kanags

சுகு: சொல்லுவாய் மானே—சிறை
உள்ள இடந்தானே—அதை
சொல்லுவாய் மானே
மல். உள்ளமென்னும் சிறையிலந்தக்
கள்ளனை நான் வைத்த விதம் தான்
சொல்லவா—நான் சொல்லவா சுகுமாரா
சொல்லவா – இன்னும் சொல்லவா

தேசிய கீர்வாணி

நேரமிதே நேசன் குணவிலாசன்
சுகுமாரன் நேரே வரும்—நல்ல
பூமாந்திடும் வண்டுபோல பூமானும் வருவரே
பூவை என் ஆவலால் மேவிட நானெதிர் காண்பேன்
கண்ணில் புகுந்தான் கருத்தில் கலந்தான்
காதலினால் எனை அடைந்தான்—கண்
ஆதாரமான வன் தனையே எனதுயிர்
ஆதாரமான வன் தனையே—காணும்
பாக்கியமே மிகு இலாக்கியம் (நே)
நாளை நான் வருவேன் எனவும்
மகிழ்வாய் பகன்றவர்—நாளை
மனம் நாணி ஏழை நான் என்றவர்
மாறாத நேர்மையால்—மனம்
நீயென் நாயகி என இசைந்தார்
நாதனும் நேர் வருவாரே (நே)

சிந்து பைரவி] [ஆதி

கண்ணாரக் காண்பதென்றோ காதல் வளர்த்த
பெண்ணாளைக் காண்பதென்றோ
மண்ணாளும் மகராஜன் மகளெனும் உயர் வாழ்வை
எண்ணாமலே ஏழை எனதன்பின் மனப்பூவை (கண்)
கனவினிலே கண்டு காமுறும் பொருள்போலே
கைக்கொண்ட கனியது வாய்க்கெட்டா விதம்போலே
நினைவது வீணாச்சே நீரினிற் குமிழ் போலே
நேசமாய் எனையாள் ஈசனும் அருளாலே

Kanags

தாளம்-ஆதி]
காசினிமேல் நாங்கள் வாழ்வதே
சுகவாழ்வுதான் கவலையில்லாமல் மனங் கலங்காமல் (கா)

ஆசையிற் பேராசையினாலே மனம் வாடிடோம்
அறிவு கெடாமல் நெறிதவறாமல் (கா)
உழைத்திடும் ஏழைமக்கள் உடன் முதலாளி
உடுப்பது நான்கு முழம் உண்பது நாழி
உண்மையிது தெரிந்து நேசமாய்
சந்தோசமாய் (கா)
கூரை வீடாம் ஓலைக்குடிசையிலே
கூழுண்டாலும் சீலம் மாறோம்
கோடீஸ்வரனோடுதான் ஈடாகவே வாழுவோம்
கூரை வீடாம் ஓலைக் குடிசையிலே
குறையணுகாமலே வறுமை வராமலே (கா)

தாளம்—ஆதி]
மா மயிலென நடனமாடுகிறாளின்னாள்
மறுமலர் மேவிய மாது போலிம் மானினி (மா)
தோகை மகிழ்ந்தே ஆடுறாள் நாகரீக நாட்டியம்
நேச பாவனையாகவே மோகனாங்கி போலவே (மா)
பார் தாங்கிய சேடனார் போலவே
பாவையாள் தன்னாலே
ஆடுறாள் முன்னாலே பாடாமலின்னாளே
பாங்கார் பூங்கொடி போலே ஆர்வமாயென் நேரிலே

இராகம் சாருகேஸ்] பல்லவி [தாளம்—ஆதி

மாரன் அவதாரம்—மணி
மந்திரவாதியிவர் மனித ரூபங்கொண்ட (மா)

அநுபல்லவி

Kanags

பாரில் இவர்க்கு யாரும் நிகரோ
பால் வழியும் முகம் பங்கஜமோ—மலர் (மா)

சரணம்

நடமாடி மகனான வடிவேலனோ—நா (திரு நடமாடி)
நாரணரில் ஒருவனோ
கொடுக்கும் கொடையாளி குணசாலி இன்பக் (கொ)
கோலாகலன் இளங் கோமள வல்லியர்
கொஞ்சிடும் ரஞ்சித (மாரன்)
குறி சொல்லும் பாட்டு—தொகையறா
பாம்பாட்டிச் சித்தனையே பக்தியோடுதான் பணிந்து

நான் பார்த்துச் சொல்லுங்குறி நாளுந் தவறாதே
சந்திர சூரியரை தாரகையை
இங்கு வரவழைத்துக் காண்பிக்கும்
இந்திர ஜாலனப்பா—நீயொரு
மந்திர வாதியப்பா—உன்
அங்கையில் காணுவது—சங்குரேகை
அற்புத மானதப்பா—அதனால் அதிஷ்டசாலியப்பா

வசனம்

நீ ஊரு சுத்திவந்ததுண்டுமா
ராஜமக ஒருத்தியை கண்டதுண்டுமா— முன்னே
நீ ஊருசுத்தி வந்ததுண்டுமா
அவ பேரழகி தானா பிடிக்குந்தானா—உம்
பிரியத்துக்கேற்ற பெண் பிள்ளை தானா
ஆருமறியாமலே கொண்டுவந்து
அம்பக்கம் செஞ்சு வைச்சதுண்மைதானா—அவளை (அம்)
நெனச்சது நடக்குமா நிதானமாகுமா
அனுகூலங் கிடைக்குமா
கிடைக்காதா—இல்லையாண்ணு—நெனைக்கிறார்
கவலையில்லாமல உங்க வேலை—இனிக்
கட்டாயம் முடிஞ்சுடும்—
தவறாதய்யனே—சாமி சாக்கியாய்
சந்தேகமேது மில்லை யப்பனே—இதிலே (சந்)

ராஜகுமாரி

மோக மானேனே—மா
மோகனுங்கா நானுன் மேலே (மோ)
மோசம் போனேன் நான் முன்னாலே
யோசனை யில்லாமல் நானே (மோ)
தேகம் ஆவி நாமேயன்றோ தேடிவந்த தெய்வம் நீரே
யோக சாலி நானே யன்றோ
உம்மைப் போல உண்டோ உலகில் (மோ)
மந்திரத்தாலே யெந்தன் கைமேலே
மாங்காயடியாமல் விழவேதான் செய்குவீர்
தந்திர சாலி நீர் அன்பு கொண்டாடுவீர்
முன்பு நான் செய்த குற்றம் எண்ணாதீர்
சொந்தம் தேடுவீர் இன்பம நாடுவீர் சுந்தராவாருமே (மோ)

சுபம்! சுபம்!! சுபம்!!!

Kanags

நடிகர்கள்

எம். ஜி. ராமச்சந்தர்	சுகுமார்
டி. எஸ் பாலையா	ஆலகாலன்
எம். ஆர். சாமிநாதன்	மந்திரவாதி
எஸ். வி. சுப்பையா	மல்லிகாவின் தந்தை
எம். எம். நம்பியார்	பகு
புளிமூட்டை	மந்திரவாதியின் சிஷ்யன்
டி. ச. ராமசாமி ஐய்யர்	
எம். ஆர். மாதவன்	நல்லான்
நாராயண பிள்ளை	பாம்பாட்டி
கே. மாலதி	மல்லிகா
கே. தவமணிதேவி	விஷாராணி
எம். எஸ். பாக்கியம்	பகுனி
எம். எம் ராதாபாய்	சுகுமாரன் தாயார்
வி. கே. சரஸ்வதி	அஞ்சலை
ஆர். மாலதி	நடனப்பெண்

கதை, வசனம், டைரக்ஷன்:

ஏ. எஸ்.ஏ. சாமி பி. ஏ.

Kanags

கலைமகள்

ஆங்கில ஆசான்

அறுபது நாட்களில் ஆசிரியரின்றி ஆங்கிலத்தை
மிக எளிதாகக் கற்றுக்கொள்ளக்கூடிய புஸ்தகம்
இதன் விலை ரூ 1-25
(முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இனாம்)
(கேட்லாக் இனாம்)

கிடைக்குமிடம்:—

கலைமகள் கம்பெனி
தபால் பெட்டி நிர் 765
124, செட்டியார் தெரு, கொழும்பு.

கலைமகள் பிரஸ், கொழும்பு 10549-4-3